தூக்கு மேடைக்கு வயது 75

2006, மார்ச் 23 வீரவேங்கை மாவீரன் பகத்சிங், சுகதேவ், ராஜகுரு தூக்கிலிடப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவாகின்றன. இன்றைக்கு பொதுவாழ்வில் தியாகம், அற்பணிப்பு போன்றவை புறக்கணிக்கப்பட்டு புரையோடிப் போகின்ற நிலையில் பகத்சிங் அவருடைய தோழர்களின் தியாகத்தை எண்ணிப் பார்க்கின்ற நாளாகவும், பகத்சிங் மற்றும் அவருடைய தோழர்களுக்கு வீரவணக்கங்கள் தெரிவிக்கின்ற நாளாகவும் அமைகின்றது.

லாகூர் சதி வழக்கில் பகத்சிங் உட்பட 24 பேர் மீது வழக்குகள் தொடரப்பட்டு பகத்சிங் மற்றும் தோழர்களுக்கு தூக்கு தண்டனை வழங்கப்பட்டது. ஏற்கனவே முதல் லாகூர் சதி வழக்கில் 135 பேர் மீது வழக்கு தொடரப்பட்டு அவ்வழக்கில் 28 பேர் தூக்கிலிடப்பட்டனர்.

'சைமன் கமிஷனே திரும்பிப் போ' என்று கோஷங்கள் நாடெங்கும் விண்முட்டியது. இந்த சைமன் கமிஷன் ஏழு உறுப்பினர்களில் ஒருவர் கூட இந்தியர் இல்லையென்று கடுமையான எதிர்ப்பை இந்தியா காட்டியது. பஞ்சாப் சிங்கம் லாலாலஜபதிராய் 30.10.28 –இல் லாகூரில் நடந்த கண்டனக் கூட்டத்தில் லஜபதிராயை ஆங்கில அரசின் காவல்துறையினர் கடுமையாக அடித்து மிதித்தனர். அப்பொழுது, லாலாலஜபதிராய் "என்மீது விழுந்த ஒவ்வொரு அடியும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மீது அடிக்கப்பட்ட அடியாகும்" என்று வீர கர்ஜனை செய்தார். அதன் காரணமாகவே, லாலா லஜபதிராய் உடல்நிலை பாதிக்கப்பட்டு இறந்தார். அதற்குப் பிறகு ஜாலியன் வாலாபாக் போன்ற கொடூர சம்பவங்கள் இந்திய இளைஞர்களின் மனதில் ரணத்தையும், வெறியையும் உண்டாக்கியது.

லாலாலஜபதிராயை தாக்கிய ஜே.பி.சாண்டார்ஸ் என்ற போலீஸ் துணை கண்காணிப்பாளரை டிசம்பர் 17 - ஆம் தேதி பகத்சிங், ராஜகுரு, ஆசாத் மற்றும் அவருடைய தோழர்கள் காவல் நிலையத்தின் அருகேயே கழுத்தைச் சுற்றி வீழ்த்தி ஐந்து குண்டுகளை சாண்டர்ஸின் நெற்றியில் இறக்கினர். இவ்வழக்கு குறித்து டெல்லி மாவட்ட கூடுதல் மாஜிஸ்ட்ரேட்டிடம் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. "இவர்கள் செய்கைகள் பிரச்சார நோக்கம் உள்ளதாக இருக்கிறது. குற்றங்களை தடுக்கும் நோக்கில் கூட இவர்கள் தண்டிக்கப்படத்தக்கவர்களே. இவர்கள் இளைஞர்கள். அதன் காரணமாக மட்டும் இவர்களுக்கான தண்டனையை குறைத்து விட முடியாது. பகத்சிங். தத் இருவரையுமே ஆயுட்கால நாடு கடத்தல் செய்யும்படி உத்தரவிடுகிறேன்" என நீதிபதி தீர்ப்பை வாசித்தார்.

ஆங்கில அரசாங்கம் இந்தியத் தொழிலாளர்களுக்கு எதிராக அறிவித்த தொழில் தகராறு சட்டம், பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் போன்ற மக்கள் விரோதச் சட்டங்களுக்கு எதிராக உரிமைக்குரல் எழுப்பப் பட்டன. பகத்சிங்கும், பதகேஷ்வர்த்தும் வெடிகுண்டுகளை நாடாளுமன்றத்தில் வீசினார்கள். வீசியவர்கள் தப்பாமல் பிரிட்டிஷ் போலீசிடம் சரணும் அடைந்தனர்.

நாடாளுமன்றத்தை எழுப்பிய வெடிகுண்டு மற்றும் பகத்சிங்கின் புரட்சிகர நடவடிக்கைகள் மக்களைத் தட்டி எழுப்பின. திலகர், காந்தி, சாவர்க்கர் ஆகியோரினுடைய விசாரணையினைப் போன்று பகத்சிங் விசாரணையும் முக்கியத்துவம் பெற்றது. சர்வ பலம் பெற்ற ஆங்கில அரசாங்கத்தின்

அராஜக போக்கால் பகத்சிங் போன்ற புரட்சியாளர்கள் ஒருபொழுதும் பாதிப்போ வேதனையோ அடையவில்லை.

பகத்சிங் மற்றும் அவருடைய தோழர்கள் லாகூர் சதிவழக்கில் சிறையில் இருந்தபொழுது தங்களுக்கு ஏற்பட்டுள்ள துயரங்கள் எதையும் மனதில் கொள்ளாமல் ஆங்கில அரசாங்கத்தை கேலி செய்து கூத்தாக்கி, புரட்சிகரமான பாடல்களையும் பாடி கோஷங்களையும் எழுப்பி வேடிக்கையாக பொழுதைப் போக்கினர். மற்ற வழக்கில் உள்ள கைதிகள் இவர்களுடைய கூத்துக்களைப் பார்த்து இவர்களுடன் சேர்ந்து கவலையை மறந்து சிறையில் இருந்த செய்திகளும் உண்டு.

லாகூர் சதி வழக்கின் விசாரணை லாகூரிலுள்ள பூஞ்ச் - இலலத்தில் மே ஐந்தாம் தேதி ஆரம்பமானது. நீதிபதி கோல்ட்ஸட்ரீம் விசாரணைக் குழு தலைவராகவும், நீதிபதிகள் அக்ஹா ஹெய்டர், ஹில்டன் உறுப்பினராகவும் இருந்தனர். அரசு தரப்பில் கார்டன் நோட்,காலண்டர் அலிகான், கோபால் லால், பக்சிதினாந்த் ஆகியோர் வாதம்புரிந்தனர். காலை 11 மணிக்கு டிரிபியூனல் விசாரணையைத் துவக்கியது. புரட்சியாளர்கள் 10.02 மணிக்கு நுழைந்தனர். புரட்சிகர கோஷங்களை முழக்கினர். எட்டு நிமிடங்களுக்கு புரட்சிகர கீதங்களைப் பாடினர்.

முன் வழக்கில் செய்ததைப் போலவே பகத்சிங் வழக்கறிஞரை அமர்த்த மறுத்தார். விசாரணை ஒரு நாடகம் என்றும், நீதிமன்றம் போன்ற நிறுவனங்களின் மீது தமக்கு நம்பிக்கையில்லை என்றும் வற்புறுத்திக் கூறினார். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வலியுறுத்தலால் குறுக்கு விசாரணை செய்வதற்கு தமக்கு ஆலோசனை மட்டும் வழங்க துணி சந்தத்தை அனுமதித்தார். வழக்கறிஞர் சாட்சிகளை விசாரிக்கவோ நீதிமன்றத்தின் முன் பேசவோ தேவையில்லை என்றார்.

லாகூர் சதி வழக்கின் விசாரணை லாகூரில் உள்ள பூஞ்ச் - இலலத்தில் நடைபெற்றது. தன் மீது சாற்றப்பட்ட குற்றங்களை பகத்சிங் மறுக்கவில்லை. விசாரணையில் தன் கருத்துக்களை பிரச்சார மேடையாகவே வழக்கு மன்றத்தில் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தினார். நாட்டின் விடுதலையை விட தன்னுடைய சொந்த விடுதலை முக்கியமல்ல என்று வாதிட்டார்.

எதிர்பார்த்தபடியே நீதி மன்றம் பகத்சிங்கையும் அவரின் தோழர்களையும் குற்றவாளியென்றே முடிவு செய்தது. பகத்சிங்க்கு எதிரான ஆதாரங்கள் மூன்று வகையில் இருந்தன.

1 கொலை செய்ததைப் பார்த்த கண்கூடான சாட்சிகள், பகத்சிங்கை அடையாளம் காட்டியது.

2 ஜெய்கோபால், ஹான்ஸ்ராஜ், வோரா ஆகிய இரு அப்ரூவர்கள்

3 "ஸ்காட் இறந்து விட்டான் என்ற வாசகங்கள் அடங்கிய போஸ்டரை பகத்சிங் கைப்பட எழுதினார் என்பதை நிரூபிக்கும் கையெழுத்து நிபுணர்களின் கருத்து.

இ.பி.கோ. பிரிவுகள் 121, 302 வெடிமருந்து சட்டப்பிரிவுகளின்படி பகத்சிங் தண்டிக்கப்பட்டார். அக்டோபர் 7- இல் தீர்ப்பு வாசிக்கப்பட்டது.

மே-1930 செப்டம்பர் 20 மரண தண்டனை என்று அறிவிக்கப்பட்டது அதை வீர வாஞ்சையோடு பகத்சிங் ஏற்றுக் கொண்டார். இதை அறிந்த பகத்சிங் தந்தை, கிவுன்சிங் ஆங்கில அரசிடம் கருணை மனு செய்தார். இதை அறிந்ததும் பகத்சிங் வேதனைப்பட்டதும் இலலாமல் தனக்குக் கருணை காட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று தெளிவாகவும், வன்மையாகவும் தன் தந்தையாருக்கு தெரியப்படுத்தினார். தொடர்ந்து நடந்த வழக்கு போரில் இறுதிக் கட்டத்தில் பகத்சிங் இராஜசிங், சுகதேவ் தூக்குக்கயிற்றை முத்தமிட்டு தூக்குமேடை ஏறினர்.

24 வயது, வாழ வேண்டிய வயது. வசந்தத்தை நாட வேண்டிய வயது. தூக்குமேடையில் நின்றபொழுது கைகளை கட்டி விட்டு, கறுப்பு துணியால் கண்களை மூடப்போகும் போது, "என் கண்களை மூடாதீர்கள், இது என் இந்தியா, இது என் நாடு என் நாட்டைப் பார்த்தபடியே மடிகிறேன்" என்றார்.

லாகூர் சிறையில் மார்ச் 23, 1931- ஆம் ஆண்டு தூக்கு தண்டனை அறிவிப்பு செய்யப்பட்டது. அதே தினத்தில் முன்னிரவு 7.28 - க்கு தூக்கு தண்டனை முடிந்தேறியது. ஏன் எனில், அடுத்த நாள், காலை மக்கள் பெருங்கடலாக லாகூர் சிறையில் திரண்டதும் காவல்துறையினர் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் குறிப்பிட்ட தேதிக்கு முந்தைய நாள் இரவிலே பகத்சிங், இராஜகுரு, சுகதேவ் மூவரையும் தூக்கிலிட்டனர். இறுதிக் கட்டத்தில் மகிழ்ச்சியாக தாங்கள் பிறந்த மண்ணிற்கு செய்கின்ற தியாகமாக தூக்குக்கயிறுக்கு இரையாகினர். இந்தியர் என்ற அடையாளம் மட்டும் மனதில் கொண்டு எந்தவிதமான மத முத்திரைகளுக்கு இடம் கொடாமல் இருக்க வேண்டுமென்று மூவரும் விரும்பினர். ஆனால், இறுதிச் சடங்குகளை சட்லஜ் நதிக்கரையில் நடந்ததாக ஆங்கில அரசாங்கம் அறிவிப்பு செய்தது.

லட்சிய வேட்கை, பிறந்த மண்ணின் பற்று என்ற இந்த வீதியாகிகள் பாடங்கள் இன்றைக்குள்ள பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு பாலபாடமாக அமைகின்றது. இன்றைக்குள்ள பொதுவாழ்வில் தியாகத்திற்கும் அர்ப்பணிப்புக்கும் அவசியமே - இலலாமல் போலித்தனமான அரசியல் போக்குகள் தனிமனித துதிகள், அரசியல் கட்சிகளின் தலைமைகளின் விருப்பு வெறுப்புக்கு ஏற்றவாறு இருக்கின்ற ஒரு சில லட்சியவாதிகளும் லட்சியப் பயணத்தை மேற்கொள்ள முடியாமல் தவிர்க்கின்ற நிலை இருக்கின்றது. தகுதியே தடையாகவும் இருக்கின்ற இவ்வேளையில் பகத்சிங் மற்றும் அவருடைய தோழருடைய தியாகங்கள் லட்சிய வேங்கைகளுக்கு இன்றைக்கும் ஆறுதல் அளிக்கின்ற செய்திகளாக உள்ளன. இந்திய வரலாற்றில் பகத்சிங்கின் தியாகங்கள் நிலைத்திருக்கும்வரை ஓரளவாவது பொதுவாழ்வில் ஆரோக்கியம் இருக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இன்றைக்கு உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் என்ற நிலையில் இந்தியாவின் இறையாண்மையே கேள்விக்குறி ஆகிவிடுமோ என்ற நிலையில் நீருபூத்த நெருப்பாக மனிதநேய ஆர்வலர்கள் மத்தியில் பகத்சிங்கின் தியாகம் இருக்கிறது.

கதைசொல்லி - ஆகஸ்ட் 2006